பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 22 | திங்கட்கிழமை | 06.01.2025 | அதிர்வு 157 |
| --- | --- | --- | --- | --- | --- |

## கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு!

**மட்டக்களப்பில் தொடரும் சோகம்**

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 05

## வடக்கில் மீண்டும் சிங்களக் குடியேற்றங்கள்

**அன்று இடம்பெயர்ந்தவர்களை இன்று மீளக்குடியமர்த்த விரும்பும் அநுர அரசு**



வடக்கு மாகாணத்தில் முன்னர் வாழ்ந்த சிங்கள மக்களை மீண்டும் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று வதிவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அறியமுடிகின்றது.

இதன்படி மீள்குடியேற விரும்புவோருக்கான வசதிகளை அரசு செய்து கொடுக்கும் என்று தெரிகின்றது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் எவ்வளவு சிங்களவர்கள் எந்தெந்த இடங்களில் வாழ்ந்தார்கள் என்ற 06



## பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க விசேட இராஜதந்திரக் குழு

### இலங்கை அரசு நடவடிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், விசேட இராஜதந்திரக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், 58ஆவது அமர்வுக்கு முன்னர் சிறப்பறிக்கையை வெளியிடவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. 06

## இலங்கையில் கடந்த வருடம் 61 பேர் சுட்டுப் படுகொலை!

**47 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர்**




இலங்கையில் கடந்த ஆண்டு 100 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 61 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 47 பேர் காயமடைந்துள்ளனர் 05

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் கையெழுத்து வேட்டை



(எஸ்.நிதர்ஷன்)

சிறைச்சாலைகளில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விசாரணை 05




'புலி வாலைப் பிடித்த கதை' பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். பிடித்த புலியின் வாலைக் கைவிட்டால் அது திரும்பிக் கடித்துவிடும். வாலைப் பிடித்திருக்கும் வரை புலிக்குப் பின்பக்கத்தில் பாதுகாப்பாக இருக்கலாம். விட்டால் புலி கடித்து விடும் என்பதால், புலி வாலைப் பிடித்தால் கைவிட முடியாது என்பதுதான் இதன் அர்த்தம்.

இது சிங்கத்தின் வாலைப் பிடித்த கதை.

விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன கடந்த புதன்கிழமை கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள விவசாய அமைச்சின் வளாகத்தில் 'தூய்மையான இலங்கை' வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, புத்தாண்டின் முதல் வேலை நாளை ஆரம்பித்து வைத்து ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார். அதன்பின்னர் அவர் சிறிது நேரம் செய்தியாளர்களிடம் பேசினார்.

இருப்பினும், பின்னர் கழுகு 05






# யாழில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது .

இதன்போது முதன்மை நிகழ்வாக மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வனும் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் நினைவுரைகள் இடம்பெற்றன.

“மக்கள் மயப்படுத்த வேண்டிய அரசியல்” எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், பேராசிரியர்கள், ஊடக நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.








# புதிய அரசமைப்பில் முழுமையான சுயாட்சியை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சி பிரேரணை



தேசிய மக்கள் சக்தியால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பில் “முழுமையான சுயாட்சியை” வலியுறுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சி பிரேரணையொன்றை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான ந.சிறீகாந்தா ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:

“புதிதாகப் பதவிக்கு வந்திருக்கும் அரசு ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் இந்த அரசமைப்பு கொண்டிருக்கும் என்றும் அது கூறியிருக்கின்றது.

இந்தநிலையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை புதிய அரசமைப்பு ஏற்று அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டாக முன்னெடுக்க தமிழர் தரப்பு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

இன்றைய அரசியல் சூழ்நிலை இதுவரை காலமும் இருந்திராத அளவுக்கு புதிய சவால்களை எமது மக்கள் முன் வைத்திருக்கின்றது. நீண்டகாலமாக தமிழ் மக்கள் அரசியல் நீதி கோரி நடத்தப்பட்டு வந்த சகல போராட்டங்களையும் அர்த்தமற்றதாக்குவதற்கு சிங்கள பேரினவாத தரப்புகளால் நன்கு திட்டமிடப்பட்ட பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்தநிலையில் தமிழ்த் தேசியம் சார்ந்த சகல அரசியல் சக்திகளும் இணைந்து செயற்பட்டு எமது மக்களுக்கான அரசியல் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ந்தும் பிளவுபட்டு நின்றால் மீட்டெடுக்க முடியாத ஆபத்துக்குள் தமிழ் மக்கள் சிக்குவதும் அவர்களின் அரசியல் உறுதி சிதைவதும் தவிர்க்கப்பட முடியாதவை ஆகிவிடும். ஆகவே, இந்த நிலைமையைக் கருத்தில் எடுத்து உறுதியான அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ்த் தேசியத் தரப்புகள் அனைத்தும் நேர்மையாகவும் உண்மையாகவும் முன்வரவேண்டும்.

ஒரே நாட்டுக்குள் தமிழ் மக்களின் தாயகத்துக்கு பூரண சுயாட்சி வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையின் பின்னால் தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்தும் விரைவாக அணிதிரள வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்த மிக முக்கியமான விடயத்தை ஆக்கபூர்வமாக கையாளும் விதத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியின் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒரு பிரேரணையை தமிழ்த் தேசியக் கட்சி முன்வைத்துள்ளது. இனிவரும் நாட்களில் தமிழ்த் தேசியம் சார்ந்த சகல அரசியல் கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு அனைவரும் விரைவாக வரமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்த வழியில் நாம் அனைவரும் முதல் அடியை எடுத்து வைக்க முடியுமானால் ஒரு தீர்க்கமான வரலாற்றுத் திருப்பதை ஏற்படுத்துவது அப்படியொன்றும் கஷ்டமான காரியம் அல்ல.” - என்றார்.

# ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்துடன் யானைகளுக்கான கழுத்துப்பட்டி

காட்டு யானைகளின் வழித்தடங்களை அடையாளம் காண்பதற்காக ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்துடன் கூடிய, யானைகளுக்கான கழுத்துப்பட்டியொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, யானைகள் கூட்டமாக நடமாடும் போது, அதில் பிரதான யானைக்கு ஜி.பி.எஸ் கருவியை அணிவிப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்காக விமான படையின் ஆளில்லா கமரா ஊடாக உதவி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, இந்த ஜி.பி.எஸ் கருவி அடங்கிய கழுத்துப்பட்டி தற்போது யானைகளுக்கு அணிவிக்கப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கஞ்சாவுடன் 3 இளைஞர்கள் கைது!



யாழ். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சாவுடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மு.உதயானந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29, 34 மற்றும் 23 வயதுடையவர்கள்.

அவர்களில் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் அதே பொலிஸாரால் அதே பகுதியில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது

## விசாரணையை ஆரம்பித்தது அரசாங்கம்



கடந்த அரசாங்க காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட ஸ்மார்ட் யூத் நைட் கண்காட்சி மற்றும் நிகழ்ச்சி தொடரில் நிதி மோசடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் பூரண விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இளைஞர் சேவைகள் பிரதியமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நோக்கங்களுக்காக, அப்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னான்டோ வினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த திட்டத்தில், இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சிக்காக 323 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார பிரதியமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தில் இளைஞர் விவகார அபிவிருத்திக்காக ஆயிரம் மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதன் பின்னணியில், இந்த நிகழ்ச்சிக்காக மாத்திரம் அதிக தொகையை செலவிட்டுள்ளமை பாரிய மோசடி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த சம்பவம் குறித்து தம்மால் வெளிப்படுத்தப்பட்டதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, கணக்காய்வு அறிக்கைகள் உள்ளிட்ட ஏனைய தரவுகளுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இளைஞர் விவகார பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தீர்வு இல்லையேல் அரிசி விற்பனையிலிருந்து விலகுவதற்குத்தயார்: ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம்



தைப்பொங்கல் பண்டிக்கைக்கு இன்னும் ஒருவார காலமே எஞ்சியுள்ள நிலையில் அதனைக் கொண்டாட முடியாத வகையில் தற்போது சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை விதித்தல், அரிசியை இறக்குமதி செய்தல் மற்றும் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கண்டறிதல் ஆகிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது.

அத்துடன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்தை அடுத்து, இதுவரையில் 88,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் கடந்த பண்டிகை காலத்தைப் போலவே தற்போதும் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில், தங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாக, அதற்கான உரிய தீர்வை வழங்குமாறு கோரி கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் ஜனாதிபதிக்கும் வர்த்தக அமைச்சருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதற்கு உரிய தீர்வு கிடைக்காவிடின், அரிசி விற்பனையிலிருந்து விலகியிருப்பதற்கு கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

கொட்டகலையில் நேற்றுபிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்வையுடைய பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது, பிரதி அமைச்சரால் ஏற்றப்பட்ட தேசியக் கொடி. அது, இடது – வலது புறங்கள் மாறி தவறாகப் பறக்க விடப்பட்டிருந்தது. கொடியில் வாளுடன் சிங்கம் அதன் தலைப் பக்கத்தில் தொங்காமல் வால் பக்கத்தில் தொங்கிப் பறந்து கொண்டிருந்தது. கொடிக்கம்பத்தின் கயிற்றில் அது தவறாகப் பொருத்தப் பட்டிருந்தது.

கொடிக்கம்பத்தில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த கொடியை பிரதியமைச்சர் ஏற்றி வைத்தார். அவ்வளவே. அதனால் தவறு அவருடையதன்று. ஆனால், நிகழ்வை ஏற்பாடு செய்த அதிகாரிகளுக்குக் காட்டம் காத்திருக்கின்றது என்பது மட்டும் நிச்சயம்.

சிங்கக்கொடி புறவளமாக ஏற்றப்பட்ட இந்தச் செய்தியை வரைந்த போது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்



இலங்கையின் சிங்கக் கொடி சுதந்திர தினத்தன்று ஏற்றப்படும் போது கொடிக் கம்பத்திலேயே எரிந்து போனமை பற்றிய ஒரு சம்பவம் குறித்து எனக்கு நினைவுக்கு வருகிறது.

இது ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்னர் – எழுபதுகளின் கடைசியில் – ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக பதவியேற்ற காலத்தில் திருகோணமலை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. (அப்போது அது திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அல்ல. கோணேஸ்வரா வித்தியாலயம் அருகில் தனியாக இயங்கிக் கொழ்ண்டிருந்தது.) நான்கரை தசாப்தங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் வெறுமனே என் மனப்பதிவில் நினைவில் நிற்கின்ற விடயங்களை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அப்போது ஈழ விடுதலைப் போராட்டம் முகிழத் தொடங்கியிருந்த காலம். பாடசாலை மாணவர்கள் விடுதலைப் போராட்டத்தின் பக்கம் நாட்டம் கொண்டிருந்தனர். திருகோணமலை இந்துக்கல்லூரியின் மாணவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்லர்.

கல்லூரியில் சுதந்திர தினத்தன்று சிங்கக் கொடியை ஏற்றும்படி சுற்று நிருபம் இருந்தது. சிங்கக் கொடி என்பது சிங்களத்தின் கொடி, பேரினவாத ஆக்கிரமிப்பின் சின்னம், அடிமைப்படுத்தலின் – அடக்குமுறையின் – அடையாளம் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனின் மனதிலும் ஆழ வேரூன்றியிருந்த சமயம்.

கொடிக்கம்பத்தை நாட்டி, தேசிய கொடியை ஏற்றுவதற்கான வேலை – பொறுப்பு – பிரதி அதிபர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்பணியை ஓர் ஆசிரியர் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மூலம் அந்த பிரதி அதிபர் முன்னெடுத்தார்.

விடயத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஈழ விடுதலையின்பால் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தனர்.

தேசியக் கொடியை ஏற்றுவதற்கு முன்னர் அதனைக் கொடிக்கம்பத்தில் கட்டிய போது ஏற்கனவே தாம் இரசாயனவியல் ஆய்வுக்கூடத்தில் இருந்து சுருட்டிக் கொண்டு வந்த பொஸ்பரஸை உள்ளே கொடிக்குள் வைத்து தந்திரமாகச் சொருகிக்கொண்டனர் மாணவர்கள். அதில் அவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பம் பற்றி இப்போதும் பல விதமாக பேசுவார்கள். சிறிய பைக்குள் மண்ணெண்ணையில் நனைந்தபடி பொஸ்பரஸை மாணவர்கள் கொடிக்குள் செருகியிருந்தனர் என்றும் கூறுகின்றனர்.

பொஸ்பரஸ் வழமையாக தண்ணீருக்குள் வைக்கப்பட்டிருக்கும். அது காற்றில் வெளியே விடப்பட்டால் தன் பாட்டில் எரியக் கூடியது.

சுதந்திர தின நிகழ்வில் கல்லூரியில் தேசியக்கொடி – சிங்க கொடி– மேலே ஏற்றப்பட்டது. கம்பத்தில் அது ஏறும்போது அதில் பொருத்தப்பட்டிருந்த பொஸ்பரஸ் காற்றுப்பட எரியத் தொடங்கியது. தேசியக் கொடியும் கம்பத்தின் உச்சத்தில் எரிந்து போனது.

இது பெரும் விபரீதமான விடயமாக ஆட்சித் தரப்பால் பார்க்கப்பட்டது. அடுத்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன.

அதிபர் நடராஜா, பிரதி அதிபர் பாலசுப்ரமணியம், ஆசிரியர் மகாலிங்கம் போன்றோர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர். என் நினைவு சரியானால் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஒருவர் பிற்காலத்தில் புகழ்பூத்த போராளியாக முகிழ்ந்த சார்ள்ஸ் அன்ரனி. மற்றொரு மாணவர், ஆசிரியரான அருணாச்சலம் பாலசுப்ரமணியத்தின் மகன் அருணா.

பல வருடங்கள் நீண்ட – நெருக்கடியான – விசாரணைகளின் பின்னர் பதவி இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரான அருணா தந்தையாரால் கொழும்புக்கு கூட்டி வரப்பட்டு பின்னர் லண்டன் சென்று விட்டார். மற்றையவரான சார்ள்ஸ் அன்ரனிதான் பிற்காலத்தில் தலைவர் பிரபாகரனுக்கு நெருக்கமான போராளியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் திகழ்ந்தவர். மீசாலையில் சுற்றிவளைப்பில் வீரமரணமடைந்தவர். இவரின் நினைவாகவே சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை தலைவர் பிரபாகரன் உருவாக்கினார். தமது மூத்த புதல்வனுக்கும் அந்தப் பெயரை அவர் சூட்டினார்.

---

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனும் பெயரில் நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கம் பல்வேறு இடங்களிலும் கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

இதன் தொடராக இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமைய யாழ். ஆயர் இல்லத்துக்கு அருகாமையில் இன்று ஆரம்பிக்கப்படுகின்ற இந்தக் கையெழுத்துப் போராட்டம் நாளையும் நாளைமறுதினமும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறையில் வாடும் உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இந்தப் போராட்டத்தில் அரசியல் பேதங்களைக் கடந்து அனைவரையும் கலந்துகொள்ளுமாறு போராளிகள் நலன் புரிச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

---

## கிணற்றில் வீழ்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தும்பங்கேணி பகுதியில் நேற்றுக் குளிக்கும்போது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தும்பங்கேணி கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான தங்கராசா பரமானந்தம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர், நீர்நிலையில் வீழ்ந்து உயிரிழந்த குழந்தையின் மரண வீட்டுக்குச் சென்றுவிட்டு வந்து கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தபோதே கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக பிரதேசவாசிகளின் உதவியுடன் அவர் பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் நடந்த பெரும்பாலான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக அமைந்துள்ளன என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 56 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை என்றும், இதில் 45 பேர் உயிரிழந்துள்ளமை தங்கள் விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

16 பேர் கொல்லப்பட்ட மற்ற 47 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் வெவ்வேறு காரணங்களால் குறிப்பாக தனிப்பட்ட தகராறுகளால் நிகழ்ந்தவை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2024ஆம் ஆண்டில் பதிவான கடைசி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் டிசம்பர் 28 ஆம் திகதி மாலையில் பதிவாகியுள்ளது. சீதுவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் காரில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர். தந்தை மற்றும் அவரது இரண்டு மகன்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பொலிஸார் விவரித்துள்ளனர்.

# பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கை தொடர்ந்தும் நிறுத்தம்




இடைநிறுத்தப்பட்டுள்ள பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் தனியார் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி, நேற்று மாலை 4.30 மணியிலிருந்து, இந்த இடைநிறுத்த நீடிப்பு அமுலுக்கு வந்ததாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும்பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் ஒழுங்கு விதிகளின் நியதிகளின் பிரகாரம் செயற்பட்டு, அந்த நிறுவனத்தின் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# திரிபோஷ நிறுவனத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து நடத்தத் திட்டம்

நாட்டு மக்களின் போசாக்கு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷ நிறு ;வனத்தை மறுசீரமைத்து, அதனை அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாகத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரிபோஷ நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.




திரிபோஷ உற்பத்தித் திறனை அதிகரிப்பது, புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்தல், பதவி உயர்வு மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தும் இக் கலந்துரையாடலின் போது விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

## பொறுப்புக்கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தத் தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

எனினும், உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

ஆனால், ஐ.நா. தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் பொறுப்புக்கூறும் விடயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான அறிக்கையைக் கூடிய விரைவில் அரசு முன்வைக்கவுள்ளது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்குப் பதிலளிப்பதாக அல்லாது எமது அரசின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசின் வெளிப்படைத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையிலேயே எமது சிறப்பு அறிக்கை அமையும். இதற்காக இலங்கையின் விசேட இராஜதந்திரக் குழு செயற்படும்.” – என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

---

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவரங்கள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தால் திரட்டப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

ஆளுங்கட்சியின் மேலிட உத்தரவொன்றின் பிரகாரம் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிகின்றது.

வடக்கின் காணிகள் வெளியாரால் ஆக்கிரமிக்கப்படுவது குறித்தான சர்ச்சைகள் நீண்டகாலம் நிலவி வரும் நிலையில், இங்கு சிங்களக் மீள்குடியேற்றங்களுக்கு அரசு தயாராகி வருவது தமிழர்களிடையே சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஜனவரி 13ஆம் திகதி சீனா பறக்கிறார் அநுர

## பிரமாண்டமான வரவேற்புக்கு ஏற்பாடு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 13ஆம் திகதி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், கடந்த மாதம் இந்தியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அநுர, ஜனவரி மாதம் சீனாவுக்குச் செல்வதை உறுதிப்படுத்தியிருந்தார். எனினும், திகதி விவரங்கள் வெளிப்படுத்தப்படாமல் இருந்தது.

இந்த நிலையிலேயே, ஜனவரி மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை அவர் சீனாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகளும் சீனாவுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது சீன ஜனாதிபதி ஜின் பிங், சீனாவின் பிரதமர், மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் ஜனாதிபதி அநுர சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். முக்கியமான ஒப்பந்தங்கள் சில இதன்போது கைச்சாத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 1000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, மழையின் தாக்கத்தால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் கெப்பெட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# கோழி இறைச்சியின் விலையில் மாற்றமில்லை

நாட்டில் தற்போது முட்டை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் கோழி இறைச்சியின் விலை குறைவடையவில்லை என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு விதிக்கப்பட்டுள்ள வற்வரி குறைக்கப்பட்டால் இறைச்சி சார்ந்த உணவுப்பொருள்களின் விலையைக் குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வழமையான பேச்சுப் பல்லக்கு

'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது. கணக்குப் புத்தகம்தான் பேசவேண்டும்' என்பார்கள்.

ஆனால் நம் அரசியல் தலைவர்கள் பலரும் வாய்ச் சவடால் பேச்சில்தான் முழங்குவார்கள் - கணக்குப்பிள்ளையின் பேச்சுப் போல. ஆனால். கணக்குப் புத்தகத்தில், செயலில், பெரும்பாலும் பூஜ்ஜியம்தான்.

இப்போது அரசுப் பேச்சாளர் முழங்கும் ஒரு விடயமும் அத்தகையதுதானா என்பதைப் பொறுந்திருந்துதான் பார்க்க வேண்டும்.

"கடந்த அரசுகள் போல் நாமும் ஊடகங்களை அச்சுறுத்தி அடக்கமாட்டோம். ஊடகங்கள் நடுநிலையுடன் சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட முழு உரிமையுண்டு. அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது." - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அமைச்சரவையின் பேச்சாளர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் மீது திட்டமிட்டு சேறு பூசும் நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவுக்குச் சொந்தமான சிங்களப் பத்திரிகையொன்று ஈடுபட்டுள்ளதாகவும் இந்தப் பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்க அரசாங்கம் தயாராகியுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ள அதேசமயத்தில்தான் இப்படி ஊடக சுதந்திரம் குறித்தும் அவரின் உருத்திராட்சப் பூனை பாணியிலான உபதேசமும் வெளிப்பட்டுள்ளது.

"கடந்த ஆட்சிக் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம். நீதியை எதிர்பார்த்து அந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் வலி, வேதனை எமக்குத் தெரியும். எனவே, அவர்களின் நீதிக்கான வேண்டுதலை நாம் நிறைவேற்றியே தீருவோம்.

"ஊடகங்களை அடக்கிக்கொண்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செய்த அரசுகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்." - என்று அவர் கூறியிருக்கின்றார்.

காலம் காலமாக அதிகாரத்திலிருந்த அரசுகள் சார்பில் அச்சமயத்தில் கூறப்பட்ட உறுதிமொழியைத்தான் தேசிய மக்கள் சக்தியின் அரசும் இப்போது கூறுகிறது.

முன்னைய அரசுகள் செய்வதாகக் கூறிச் செய்யாமல் சென்ற விடயத்தைத்தான் இப்போது தான் செய்யப் போவதாக இந்த அரசும் கூறுகிறது.

கடந்த காலத்தில் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள்தான். பெரும்பாலும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளின் சூத்ததாரிகளாக அரசு தரப்பினரே சுட்டப்படுகின்றனர். சந்தேகிக்கப்படுகின்றனர்.

ஆனால் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விடயத்தில் தென்னிலங்கை ஆட்சிப்பீடம், நீதி, நியாயமான - காத்திரமான - நேர்மையான - உண்மையான - விசாரணைகளை நடத்தவே இல்லை என்பதுதான் கடந்த கால அனுபவம்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்களான லஸந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்கள்விடயத்தில்விசாரணை ஆரம்பகட்டத்தையாவது தாண்டி இருக்கின்றது. ஆனால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கவிடயத்தில் எந்த நடவடிக்கைகளுமே முன்னெடுக்கப்படவில்லை. யாருமே சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. தண்டிக்கப்படவும் இல்லை.

தராக்கி சிவராம் விடயத்தில் மாத்திரம் உலகத்தை சமாளிப்பதற்காக மூடி மறைப்பு விசாரணை ஒன்று நடைபெற்று முடிந்திருக்கிறது. அவ்வளவே.

இப்போது ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக நீதி, நியாயமான விசாரணைகளை முன்னெடுப்போம் என்று கூறும் இந்த அரசின் கூற்றாவது நிறைவேற்றப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# மக்களின் மனவோட்டத்தை பொலிஸார் மாற்ற வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் அறிவுறுத்து



"பொலிஸார் தொடர்பில் பொதுமக்களுக்கு எதிர்மறை நிலைப்பாடே காணப்படுகின்றது. அந்த நிலைப்பாட்டையும் மனநிலையையும் பொலிஸார் மாற்ற வேண்டும்." – என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸாருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு மாகாணத்தில் பொலிஸார் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பொதுமக்கள் மத்தியில் பொலிஸாரைப் பற்றி நல்ல நிலைப்பாடு உள்ளதா? என்று கேட்டால் இல்லை என்பதே பதில். எனவே, இந்த எண்ணத்தை மாற்றும் வகையில் பொலிஸார் இந்த வருடத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.

இலங்கை முழுவதும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவான வாக்குகள் கிடைத்தன. அந்த மக்கள் ஆணையைக் காப்பாற்றும் கடப்பாடு எமக்கு உள்ளது. இன்று நான் செல்லும் இடங்களிலெல்லாம் வன்முறை, வாள்வெட்டு தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தி மக்கள் சுமூகமாக வாழ்வதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும்." – என்றார்.

# சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை மூன்று மில்லியனாக அதிகரிக்கத் திட்டம்

## அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவிப்பு



இந்த வருடத்தில் மூன்று மில்லியன் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு கொண்டுவருவதே எமது இலக்காகும் என வெளிவிவகார, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

பெந்தொட்டை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத நிலையம் ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"நாட்டின சுற்றுலாத்துறை வேகமாக முன்னேறிச் செல்கிறது. கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி, இந்த வருடத்தின் சுற்றுலா பயணிகளின் வருகை இலக்கான 2 மில்லியனை பூரணப்படுத்தியுள்ளோம். அதனால் இந்த வருடம் அந்த எண்ணிக்கையை 3 மில்லியன் வரை அதிகரித்துக்கொள்ளவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதன்போது சுற்றுலா பயணிகளின் வருகை அளவை அதிகரிப்பது போன்று சுற்றுலா பகுதிகளின் முன்னேற்றத்தையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். சுற்றுலா துறைகளின் தரத்தை அதிகரித்துக்கொள்வதன் மூலமே உலகில் உயர்ந்த அந்தஸ்த்தில் இருக்கும் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்துக்கொள்ள முடியும்.

ஆயுர்வேத மூலிகை, எமது சம்பிரதாய,கலாசார உரிமைகள் மற்றும் உணவு பழக்க வழக்கங்கள் என அனைத்து சுற்றுலா பயணிகளுக்கு அனுபவிக்க கிடைக்கிறது. திறந்து வைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ நிலையமானது சுற்றுலா பயணிகளை மிகவும் கவரமுடியுமான துறையாகும். சுற்றுலாத்துறை என்பது வெறுமனே கைத்தொழில் மாத்திரமல்ல.

எமது நாட்டின் பிரதிபலிப்பு, எமது நாட்டின் கலாசாரம், எமது நாட்டின் வரலாறு. இந்த மூன்று விடயங்களையும் சுற்றுலா பயணிகளுக்கு குறுகிய காலத்தில் அனுபவிக்க முடியுமாகிறது. அதேபோன்று எமது வரலாற்றை உலகுக்கு கொண்டு செல்லும் மத்திய நிலையமாக சுற்றுலாத்துறை திகழ்கிறது.

ஆயுர்வேத மருத்துவம் எமது நாட்டின் தனித்துவமான மருத்துவ முறையாகும். எமது நாட்டின் தேசிய உரிமையை மேலும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயுர்வேதம் உடலியல் சுகாதாரத்துக்கு மாத்திரமல்ல மனோரீதியான ஆராக்கியத்துக்கும் சிறந்ததாகும்.

மேலும் சுற்றுலாத்துறையை கிராம மக்களுடன் தொடர்புபடுத்தி முன்னேற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அப்போதுதான் கிராமிய மக்களின் வாழ்க்கை முறையை சுற்றுலா பயணிகளுக்கும் அனுபவிக்க முடியுமாகிறது. அதேநேரம் கிராம மக்களுக்கும் சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் அவர்களிக் வாழ்க்கை தரத்தை முன்னேற்றிக் கொள்ள வழி ஏற்படுகிறது.

அத்துடன் சில நாடுகளில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் சுற்றுலாவுக்காக மாத்திரமின்றி இங்கு வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இது இந்த காலத்தில் நாங்கள் எதிர்கொண்டுவரும் பாரிய பிரச்சினையாகும். சுற்றுலா விசாவில் வருகின்றன ஒரு சிலரே எமது சுற்றுலா கைத்தொழில் துறைகளில் அந்த இடத்துக்கு உரித்தான வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாங்கள் எமது சுற்றுலா கைத்தொழிலை உயர் தரத்தில் மேற்கொள்ளவதன் மூலம் அந்த வியாபார நடவடிக்கைகளை தோற்கடிக்க முடியும்."– என்றார்.

# கிளிநொச்சியில் இன்று யோகேந்திரநாதனின் நினைவேந்தல் நிகழ்வு

ஈழத்தின் மூத்த கலை இலக்கியப் பேராளுமை அமரர் நா.யோகேந்திரநாதனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு எழுத்தாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசத்தின் உறவுகளுக்கு அமரர் நா.யோகேந்திரநாதனின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.



# வடக்குக் கிழக்கில் இந்தியாவைத் தவிர எந்த நாட்டிற்கும் இடமளிக்கமாட்டோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு





**(கனகராசா சரவணன்)**

வடக்குக் கிழக்கில் எந்த நாட்டிற்கும் அனுமதியில்லை. இந்தியாவுக்கு மட்டும்தான் தமிழர்கள் அனுமதிப்பார்கள். அவர்கள்தான் இந்த நாட்டை பாதுகாக்க கூடிய வல்லமை கொண்ட சக்தியுடைய தொப்புள்கொடி உறவுகள். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுதர இந்தியா முன்னின்று செயற்படவேண்டும். அதற்காக தமிழ் தலைவர்கள் தங்களது பதவிக்காக நலனுக்காக செயற்படாது, மக்களின் நலனுக்காக இந்த விடயத்தை ஆணித்தரமாக வலியுறுத்தவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

– கொக்கட்டிச்சோலை முனைக்காட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 வருட நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு அன்னாரது புகைப் படத்திற்கு மலர் தூவி, சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேஷ் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தீவை மையப்படுத்தி ஒரு பூகோள ஆதிக்க அரசியல் போட்டி நீண்ட காலமாக இடம் பெற்றுவருகின்றது. அதில் தமிழ் மக்கள் சிக்குண்டு, சிங்கள தேசத்தினால் இனழிப்புக்கு உட்படுத்தப்பட்ட காலத்திலே, மக்களுக்காக இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போரடிக் கொண்டிருந்த போது, இந்த விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் எனச் சித்திரித்து, இந்த உலகத்திற்கு இந்த நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் ஆட்சியாளர்களும் ஒரு பிழையான விம்பத்தை எடுத்துக் கூறிவந்தனர்.

இதன் போது படுகொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலம், தமிழர்களுடைய இந்த விடுதலை போராட்டம் ஒரு நியாயமான ஒரு போராட்டம், தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான போராட்டம் என உலகத்துக்கு எடுத்து கூறியவர். இதன்காரணமாக – தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தமையினால் – சந்திரிக்கா ஆட்சியில் இதே தினத்தில் வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த மாமனிதர்களுடைய வரலாறு இளம் தலைமுறையினருக்கு கடத்தப்படவேண்டும்.

போராட்டம் இன்னும் மௌனிக்கவில்லை. மக்கள் நன்கு அறியவேண்டும். புலம் பெயர்ந்த மக்கள் எமது விடுதலைக்காகமிககடுமையாகஉழைத்துக் கொண்டிருக்கின்றனர். சிங்கள தேசம் 2009 உடன் எல்லாம் முடிந்துவிட்டது எனக் கனவு கண்டு கொண்டிருக்கின்றது. ஆனால் இல்லை, போராட்டம் வீச்சாக்கப்பட்டுள்ளது. ஆகவே மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்த ஆட்சி மாற்றம், ஊழல் ஒழிப்பு என்ற அடிப்படையில் வந்துள்ளது. இவர்கள் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக மிக மோசமாக செயற்பட்டவர்கள். இந்த அநுரா அரசு ஜே.வி.பியின் முகம். அரசியல் ரீதியில் ஜே.வி.பி., ஆனால் நடைமுறையில் என்.பி.பி. அதனால் அரசியல் ரீதியான ஜே.வி.பி. ஆதிகம்தான் இருக்கின்றது. அவர்களது அரசியல் என்பது இந்த ஒட்டுமொத்த நாடும் ஒரு சிங்கள பௌத்த நாடு, இதற்காக தொடர்ந்தும் சிங்கள மக்களுக்காக போராடுவோம் என்ற அடிப்படையில் அவர்கள் தென்பகுதியில் செயற்பட்டுள்ளனர்.

இன்றும் தென்பகுதி மக்களிடம், தமிழ் மக்கள் நாங்கள் சொல்வதை கேட்காவிட்டால் ஆயுதம் தூக்கி அவர்களை அடக்குவோம் என பல கூட்டங்களில் கூறியுள்ளனர். இன்று என்.பி.பி. தலைவராக இருக்கும் ஜனாதிபதி அநுரா முள்ளிவாய்கால் யுத்தத்தில் இராணுவத்தினர் தளர்வு நிலையில் இருந்தபோது தென்பகுதியில் 50 ஆயிரம் இளைஞர்களைச் சேர்த்து இராணுவத்திற்கு வழங்கி, மக்களை இனப்படுகொலை செய்த முக்கியமான நபர்.

மாமனிதர்கள் செய்த தியாகங்களை சாதாரணமாக யோசிக்க கூடாது. இந்த இனம் வாழ்வதற்காக எத்தனையே மகான்களை கொடுத்திருக்கின்றோம். தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தில் இருந்து ஒரு நாளும் விடுபடவில்லை. யாழில் 3 ஆசனம் ஜே.வி.பிக்கு வந்துள்ளது. ஏற்கனவே டக்ளஸ், அங்கஜன் அரசாங்கத்துடன் இருந்தனர். அந்த வாக்குகள் ஒரு கட்சிக்கு போனதால்தான் 3 ஆசனத்தை ஜே.வி.பி. பெற்றுள்ளது. ஆகவே தமிழ் தேசியத்துடன் யாழ் மக்கள் இருக்கின்றனர்.

அதே போன்று மட்டக்களப்பிலும் தமிழ் தேசியம் வென்றுள்ளது. எனவே மக்கள் நிதானமாக இருக்கவேண்டும். ஆசாபாசங்களுக்கு முகம் கொடுக்க கூடாது. இந்த மண்ணிலே ஏகப்பட்ட படுகொலைகள் நடந்தேறியுள்ளன. முதலாவது மாமனிதர் குமார் பொன்னம்பலம். அதனை தொடர்ந்து விடுதலை போராட்டத்தில் மக்கள் மீதும் மண்மீதும் தமிழ் மக்கள் மீதும் அக்கறை கொண்ட எத்தனையே எழுத்தாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசியம் தோற்குமாக இருந்தால் இலங்கை தீவில் தமிழர்கள் அடிமைகள் அல்லது தமிழர்கள் துடைத்து எறியப்படுவார்கள். ஆகவே பாரபட்சம் பார்க்காமல் தமிழ் தேசியத்தின் பின்னால் நிற்கவேண்டும். தமிழ் தேசியத்தை கட்டியொழுப்ப வேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய தாயகம். சிங்கள தேசம் கனவு காணலாம். ஒரு நாளும் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்த நாட்டை கட்டியொழுப்ப முடியாது.

தொடர்ச்சி ▾

# வடக்குக் கிழக்கில் இந்தியாவைத் தவிர எந்த நாட்டிற்கும் இடமளிக்கமாட்டோம்









தொடர்ச்சி▲

அது ஒரு பகல்கனவாக இருக்கும்

சிங்கள ஊடகவியலலாளர் பிரதீப் எக்னியகொட கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு பெரிய களம் எனழைக்கப்படும் எருமைதீவில் புதைக்கப்பட்டுள்ளார் என கடற்படையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு பல படுகொலைகள் நடந்தேறியுள்ளன.

இந்த மாவட்டத்தில் பிரதி அமைச்சர்களாக இருந்தவர்கள் மக்களைக் கடத்தி கொன்றுள்ளனர். இந்த உண்மைகள் ஒரு நாள் வெளிவரும். உண்மைகள் வெளிவரவேண்டும். ஊழல்கள் ஒழிக்கப்படவேண்டும். அதற்கு நூறுவீதம் ஒத்துழைப்போம். ஆனால் தமிழ் மக்கள் மீது ஏறிக் கொண்டு – தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நசிக்கி கொண்டு – முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஒரு போதும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எந்த விதத்திலும் அனுமதிக்காது.

வடக்கு, கிழக்கிலே தமிழ் மக்களுக்கு துரோகங்களையும் பணமோசடிகளையும் செய்து கொண்டு வந்தவர்களை மக்கள் தூக்கி எறிந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட 760 பில்லியன் ரூபா நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளது. இது போல தெரிந்தவை, தெரியாமல் எத்தனையோ மோசடிகள் நடந்துள்ளன. மக்களின் பணத்தைச் சுருட்டிக் கொண்டு மக்களை ஏமாற்றி வந்தவர்களுக்கு சரியான பாடத்தை இந்தமுறை மக்கள் வழங்கியுள்ளனர்.

இந்தியா, சீனா மற்றும் எனைய நாடுகள் இந்த நாட்டை தங்களது ஆதிக்கத்துக்காக போட்டி போட்டுக் கொண்டுள்ளன. இந்த இடத்தில் தமிழர்கள் நிதானமாக இருந்து சரியான முடிவு எடுக்கவேண்டும். இதில் தமிழ் தலைவர்கள் தங்களது பதவிக்காக – நலனுக்காக – செயற்படக் கூடாது. மக்களின் நலனுக்காகச் செயற்பட வேண்டும்.

இந்தியா வெளியுறவு கொள்கையில் இலங்கையைத் தனது கையில் வைத்து கொள்ள வேண்டும். தமிழர்களை பொறுத்தமட்டில் இலங்கை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருப்பதில் எந்த தயக்கமும் இல்லை. ஆனால் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்குரிய தீர்வை இந்தியா செய்யுமாக இருந்தால் நூறுவீதம் இந்தியாவுடன் சேருவோம். இந்தியாவை விட்டு ஒருவரிடமும் போகமாட்டோம். – என்றார்.



# தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு நிகழ்வுகளை இரு நாள்கள் நடத்த ஏற்பாடு!



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை காலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியின் நூற்றாண்டு விழா நாளை (07) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்ட பத்திலும் மறுநாள் (08) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுரு கன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அன்னபூரணி மண்டபத்தில் நடை பெறும் முதல் நாள் நிகழ்வில் வரவேற் புரையை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தான நிர்வாக சபை உப தலைவர் சி. அருளானந்த சிவம் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை மாவை ஆதீன முதல்வர் மகாராஜ ஸ்ரீ ச. இரத்தின சபாபதிக் குருக்கள், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்க லைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தொடர்ந்து "கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நூற்றாண்டு மலர்" மலர் வெளியீட்டுக் குழுவால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இதன் முதற் பிரதியை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தர்மகத்தா சபைத் தலைவர் த. சித்தார்த்தன் பெற்றுக் கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் வர வேற்புரையை தெல்லிப்பழை துர்க்கா புரம் மகளிர் இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனனும் ஆசியு ரையை கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாத சுவாமிகளும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசி ரியர் என். சண்முகலிங்கன், யாழ். பல்கலைக் கழக முன்னாள் பீடாதி பதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஜப்பான் பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மூத்த எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர்.

"அன்னையின் கந்த புராணச் சொற் பொழிவுகள்" என்னும் நூல் வெளியீட்டு ரையை யாழ். பல்கலைக் கழக முன் னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரி யர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்த வுள்ளார்.

தொடர்ந்து "சிவத்தமிழ்ச் செல்வி" சிறப்பு மலர் வெளியீட்டுரையை ஜேர் மனி வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி சு.சிவகுமாரன் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள், துர்க்காபுரம் மகளிர் இல்லப் பழைய மாணவிகள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிறந்தநாள் அற நிதியத்தின் அன்பளிப்பு வழங்கலும் இடம்பெறும்.

தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. அரசகேசரி கல்வி நிதியம் பெறவுள்ளார்.

தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச் சைப் பிரிவுக்கான மருத்துவ நிதி யத்தை வைத்தியசாலை அத்தியட் சகர் வைத்திய கலாநிதி ஏ. தேவநேசன் பெற்றுக்கொள்வார்.

நன்றியுரையை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப செயலாளர் இ. இராதா கிருஷ்ணா நிகழ்த்துவார்.




## நாட்டில் 11 வருடங்களின் பின்னர் குழந்தை பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி

நாட்டில் 11 வருடங்களின் பின்னர் குழந்தை பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு 352,450 குழந்தைகள் பிறந்தன என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 228,091 ஆக குறைவடைந்துள் ளதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் வருடாந்த குழந்தை பிறப்பு வீதம் சுமார் ஒரு லட்சத்தால் குறைவடைந்துள்ளதாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


இது தொடர்பில் மக்களிடையே தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டுமென விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

## பொய்யான குரல் பதிவு தொடர்பில் மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

Clean Sri Lanka திட்டம் தொடர்பில் பொய்யான கருத்து களை வெளியிட்ட ஒருவரின் குரல் பதிவு சமூக ஊடகங்க ளில் பகிரப்படுகின்றமை குறித்து தெரியவந்துள்ளதாக பொலிஸ ாரினால் அறிக்கை வெளியி டப்பட்டுள்ளது.

பொலிஸ் கட்டளைச் சட்டத் தின் பிரிவொன்றை குறிப்பிட்டு பொதுமக்கள் தமது வீட்டுக்கு முன்பாக காணப்படும் பகுதியை சுத்தமாக வைத்திருக்க வேண் டும் என தெரிவித்தும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கி யும் குறித்த குரல்பதிவு வெளியி டப்பட்டுள்ளதாக அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்படாதவர் களுக்கு எதிராக எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வும் குறித்த குரல்பதிவில் தெரி



விக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த குரல்பதிவு பொய்யா னது எனவும் இதனை இலங்கை பொலிஸ் வெளியிடவில்லை எனவும் பொலிஸாரின் அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்தக் குரல் பதிவை வெளியிட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப் பதற்கான விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடந்த கஜமுக சங்காரம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயக விரத பெருவிழா மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்று வருகின்றது.

விநாயக விரத பெருவிழாவின் 20ஆம் நாளான நேற்று முன்தினம் மாலை கஜமுக சங்காரம் இடம்பெற்றது.

இந்து மக்களினால் கடைப்பிடிக்கப்படும் விநாயக விரதங்களுள் பிரசித்தி பெற்ற விரதமாக விநாயக சஷ்டி விரதம் காணப்படுகின்றது.

இது கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சதுர்த்ததி வரையுள்ள இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும் விரதமாகும்.

இவ் விரதத்தின் 20ஆம் நாள் நிகழ்வே கஜமுக சங்காரம் ஆகும் .

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பஞ்சமுகவிநாயக பெருமான் பூத வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளி கஜமுகனுடன் போராடி கஜமுகனை சம்காரம் செய்தார்.

பாரம்பரிய முறைப்படி மயிலாட்டம், குதிரையாட் டம்,பொம்மை ஆட்டம் உள்ளிட்டவையும் இடம்பெற்றது.

பெருமளவிலான விநாயக அடியார்கள் கலந்துகொண்டு கஜமுக சங்கார நிகழ்வினை கண்டுகளித்தனர்.











# ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கிய ஆன்மீகப் பாதயாத்திரை நேற்று

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு இலங்கை சைவமகாசபையின் வருடாந்த ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாதயாத்திரை 11 ஆவது வருடமாக மாதகல் சம்புநாத ஈச்சரர் முன்றலில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை ஆரம்பமாகியது.

சம்பில்துறை சம்புநாத ஈச்சரர் ஆலயத்தில் ஆரம்பமாகிய ஆன்மீகப் பாதயாத்திரை சாந்தை, பனிப்புலம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை, காரைநகரில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களையும் தரிசித்தவாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடைந்தது.

இதன் பொழுது அடியவர்களால் சிவனுக்குரிய பஜனைகள் பாராயணத்துடன் இடம் பெற்றன. பாதயாத்திரை தரிசித்த ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமையோடு, பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கு தன்னார்வலர்களால் தாக சாந்தியும் வழங்கப்பட்டது.

யாத்திரையில் அகில இலங்கை சைவமகாசபையினர், தமிழ் சைவ பேரவையினர், சிவமங்கையர், சிவ தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# குஜராத்தில் கடலோர காவல்படையின் ஹெலிக்கொப்டர் விபத்து; 3 பேர் பலி



குஜராத் மாநிலம் போர்பந்தர் விமான நிலையத்தில் நேற்று விபத்து ஒன்று ஏற்பட்டது. வழக்கமான பயிற்சியின் போது கடலோர காவல்படைக்கு சொந்தமான இலகுரக துருவ் ஹெலிக்கொப்டர் திடீரென்று கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த விபத்தில், ஹெலிக்கொப்டரில் பயணித்த 2 பைலட்டுகள் உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

போர்பந்தர் விமான நிலையம், தற்போது பயணிகள் விமானங்களை இயக்கவில்லை. அங்கு இந்திய விமானப்படை மற்றும் ஏனைய படைப் பிரிவுகளின் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்துகின்றன. கடலோர காவல்படைக்கு சொந்தமான ஹெலிக்கொப்டர்களும் இதே விமான நிலையத்தை பயன்படுத்துகின்றன.

மேலும் திடீரென ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதை அறிந்ததும், தீயணைப்பு வீரர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணிகளை தொடங்கினர்.

அதேபோல், இந்திய கடலோர காவல் படை விபத்தை தொடர்புடைய தகவல்களை உறுதிப்படுத்தியது. இந்திய கடலோர காவல்படைக்கு சொந்தமான இலகுரக துருவ் ஹெலிக்கொப்டர், குஜராத்தின் போர்பந்தரில் பயிற்சி பணியின்போது விபத்தில் சிக்கியது. இதில் 3 பேர் பலியாகினர் என்று கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

இதுவரை விபத்தின் காரணம் தெளிவாக தெரியவில்லை. தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இதேபோல் ஒரு இந்திய கடலோர காவல்படையின் ஹெலிக்கொப்டர் அரபிக்கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகியது.

# மாநில அரசு என்ற பெயரில் பேரழிவையே டில்லி கண்டது

## ஆம் ஆத்மி கட்சி மீது பிரதமர் மோடி விமர்சனம்



“மாநில அரசு என்ற பெயரில் டில்லி மக்கள் பேரழிவையே கண்டார்கள். எதிர்வரும் டில்லி தேர்தலில் பா.ஜ.கவுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.”

– இவ்வாறு ஆம் ஆத்மி அரசு மீது பிரதமர் மோடி விமர்சனம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த பரிவர்தன் பேரணியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

“வளர்ச்சி அடைந்த இந்தியாவின் தலைநகராக டில்லியை நாம் மாற்ற வேண்டும். டில்லியின் வளமான எதிர்காலத்துக்காக பாரதிய ஜனதா கட்சிக்கு இந்தத் தேர்தலில் டில்லி மக்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். கடந்த 10 ஆண்டுகளில் டில்லியில் இருந்த அரசு பேரழிவுக்கு சற்றும் குறைவில்லாதது. டில்லி வளர்ச்சியை விரும்புகிறது.

நான் ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை வழங்கியும் அடிக்கல் நாட்டியும் விட்டு நேரடியாக இங்கே வருகிறேன். நாம் 2025 இல் நிற்கிறோம். அடுத்து வரும் 25 ஆண்டுகள் டில்லிக்கும் ஒட்டுமொத்த இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது. இந்த 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாறும். நாம் அதன் அங்கமாக இருப்போம். இந்த ஆண்டுகளில் இந்தியா ஒரு புதிய நவீன யுகத்துக்கு மாறும். உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும் நாள் விரைவில் வரும். டில்லி அதற்கு முக்கிய பங்களிக்க வேண்டும்.

அநீதியை பொறுத்துக்கொள்ள முடியாது, மாற்றம் வேண்டும் என்ற குரலை டில்லி முழுவதிலும் கேட்க முடிகிறது. டில்லி தற்போது மாற்றத்தை விரும்புகிறது. டில்லி பா.ஜ.கவை நம்புகிறது. நல்ல ஆட்சி, வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு, அனைவருக்குமான நலன் போன்ற காரணங்களால் பா.ஜ.க. மிகவும் நம்பிக்கையான கட்சியாக உள்ளது.

அதனால் தான் ஒரு முறை பா.ஜ.க. மீது நம்பிக்கை வைத்த மக்கள் மீண்டும் மீண்டும் அதனை நம்புகிறார்கள். வட இந்தியா, ஒடிசா சமீபத்தில் ஹரியானாவில் பா.ஜ.க. தொடர்ந்து மூன்றாவது முறையாக தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. டில்லியிலும் பா.ஜ.கவின் எம்.பிக்கள் டில்லி மக்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவின் தாமரை மலரும் என்று நம்பிக்கை உள்ளது. பா.ஜ.கவின் தீர்மானம் மற்றும் வளர்ச்சிக்கான அதன் பார்வையை மக்களிடம் எடுத்துக்கூறும்படி நான் பா.ஜ.க. தொண்டர்களுக்கு வலியுறுத்துகிறேன்.” – என்றார்.








# பிரித்தானியாவில் அதிகரித்த பனிப்பொழிவு; விமான நிலைய ஓடுபாதைகள் மூடப்பட்டன

அதிக பனிப் பொழிவு காரணமாக பிரித்தானிய மன்செஸ்டர், லிவர்பூல் ஜோன் லெனான் மற்றும் பர்மிங்காம் விமான நிலையங்களின் ஓடுபாதைகள் மூடப்பட்டுள்ளன.

ஓடுபாதையில் உள்ள பனிக் கட்டிகளை அகற்றும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

பிரித்தானியாவின் பல பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், அங்கு தற்போது, மறை 11 செல்சியஸ் அளவில் பனிப் பொழிவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடந்த ஆண்டில் காசாவில் 800 பள்ளிவாசல்கள் சேதம்

கடந்த ஆண்டு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காசாவில் 815 பள்ளிவாசல்கள் சேதமடைந்துள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இவற்றுள் 151 பள்ளிவாசல்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என பலஸ்தீனிய மத விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிய தாக்குதலில் காசா நகரில் உள்ள மூன்று தேவாலயங்களும் முழுவதுமாக சேதமாக்கப்பட்டுள்ளன

இதனிடையே கடந்த 24 மணி நேரத்தில் 88 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் எனவும் 208 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.








# அமெரிக்காவின் உயரிய விருதை தன்வசப்படுத்தினார் மெஸ்ஸி

அமெரிக்காவின் உயரிய விருதான 'பிரசிடென்ஷியல் மெடல் ஆஃப் ஃப்ரீடம்' (Presidential Medal of Freedom) விருதை உதை பந்தாட்ட வீரர் லியோனல் மெஸ்ஸி பெற்றுள்ளார்.

இதன் மூலம் இந்த விருதைப் பெற்ற முதல் உதை பந்தாட்ட வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

கடந்த 1963 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த விருது அமெரிக்காவின் வளர்ச்சி, பாதுகாப்பு, சமூக பங்களிப்பு மற்றும் உலக அமைதி அல்லது தனிநபர்களின் சமூக செயற்பாடு போன்றவற்றை மையப்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 19 பேருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது.

ஹிலாரி கிளிண்டன், டென்சல் வொஷிங்டன் ஆகியோருடன் மெஸ்ஸிக்கும் இந்த விருதை வழங்குவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது.

இந்த விருதினை அமெரிக்க ஜனாதிபதி நேற்று வழங்கினார்.

இருப்பினும் இந்த விருது வழங்கல் நிகழ்ச்சியில் தவிர்க்கமுடியாத காரணத்தினால் மெஸ்ஸி கலந்து கொள்ளவில்லை என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 06.01.2025




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் பணிகளை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபமும் ஆதாயமும் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் இலக்குகளை அடையும் ஆற்றல் மிகுந்து காணப்படும். உங்கள் பேச்சாற்றல் காரணமாக நீங்கள் பிரபலமாவீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் திறமைகள் மூலம் நீங்கள் பிரகாசிப்பீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டும் என்ற மனநிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல்களின் மூலம் உங்கள் துணையை திருப்திப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உபரிப் பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நேர்மறையான எண்ணம் உங்கள் ஆரோக்கியத்தை நல்ல முறையில் பராமரிக்க உதவும்.




இன்று சராசரிக்கும் சற்று மேலான பலன்களை எதிர்பார்க்கலாம். உங்கள் இலக்கை அடைய நீங்கள் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இறுதியில் உங்கள் நேர்மையான முயற்சியால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

சில சமயங்களில் உங்கள் துணையிடம் பொறுமையின்றி காணப்படுவீர்கள்.உறவில் நல்லிணக்கம் பேண பொறுமை அவசியம்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். என்றாலும் தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்புத் தன்மை ஏற்படும். குளிர்ச்சியான பொருள்களைத் தவிர்க்கவும்.




இன்று சூழ்நிலைகள் சவால்கள் நிரம்பியதாக இருக்கும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். தகவல் தொடர்புக் குறைபாடு காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி கிடைப்பது கடினமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். பணியில் வளர்ச்சி காண நீங்கள் மிகுந்த முயற்சியும் கடின உழைப்பும் கொள்ள வேண்டும்.

நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வு குறையும்.

இன்று பணப்புழக்கம் குறைவாக இருக்கும். நீங்கள் வரவையும் செலவையும் விவேகத்துடன் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சிறப்பான சூழ்நிலை காணப்படும். உங்கள் ஆற்றலும் உற்சாகமும் அதிகரித்து காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளிக் கூட எளிதாக முடிக்கும் திறமை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது அமைதியான அணுகுமுறை வேண்டும். இந்த அணுகுமுறை நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.

போதிய பணம் காணப்பட்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நீங்கள் புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்று உங்கள் இலக்குகளை அடைய உங்கள் அதிர்ஷ்டம் சாதகமாக இருக்காது. என்றாலும் உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை . இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்காமல் இருக்க உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

பணியிடச் சூழல் சவால்கள் நிறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் சிலவற்றை நீங்கள் எதிர் கொள்ள நேரும்.இதனால் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்புக் குறைவு.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எந்தவொரு செயலையும் யோசித்து செய்வதன் மூலம் எதிர்மறை விளைவுகளை தடுக்கலாம். மனதை பொழுது போக்கு விஷயங்களில் செலுத்துங்கள்.

கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள பணிகளை கவனமுடன் திட்டமிட வேண்டும்.

இருவரிடையே நிலவும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத் தகாத தருணங்களை சந்திக்க நேரலாம்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகளை இன்று நீங்கள் சந்திக்க நேரலாம்.அதனைக் கடினமாக உணர்வீர்கள்.

தூக்கமின்மை காரணமாக இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். தெய்வீக இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணியிடத்தில் பதட்டம் கானபப்டும். சகபணியாளர்களின் மூலம் தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். பெண் ஊழியர்களிடத்தில் கவனமாக இருக்கவும்.

மோசமான புரிந்துணர்வின் காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்படும். எனவே உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக அணுகுவது நல்லது.

இன்று பணப் புழக்கம் குறைந்து காணப்படும். இன்று பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.01.2025




இன்று நன்மைகள் விளையும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள். இன்றைய செயல்களை திறமையாக ஆற்றத் திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.குடும்பத்தில் நிகழும் சுப நிகழ்ச்சியில் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தியை அளிக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நேர்மறையான எண்ணம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். கஷ்ட நேரங்களில் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் செயல்களின் முடிவுகளின் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

பணியில் வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். என்றாலும் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அது இன்றைய நாளின் மகிழ்ச்சியான சூழ் நிலையை பாதிக்கும்.

இன்று நிதிவளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித் தனத்தைக் கொண்டு நீங்கள் நிறைய சாதிக்கலாம். உங்கள் சுய முயற்சி மூலம் உங்கள் செயல்களில் வளர்ச்சி காண்பீர்கள். புதுமையான முறையைக் கையாள்வதன் மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளில் வெற்றி பெறலாம்.

பணிகள் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகள் தரம் நிறைந்ததாக இருக்கும். இதனால் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். சமூகமான சூழ்நிலை காரணமாக பரஸ்பர அன்பும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பணவரவு காணப்படும். பொருளாதார பாதுகாப்பை உருவாக்கிக் கொள்வீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் இருக்காது. மின் சாதனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை. தியானப் பயிற்சி ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்களை சந்திக்க திறமையாக திட்டமிட வேண்டும். பணிகளை மேற்கொள்ளும் போது நீங்கள் தவறு செய்ய நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக மந்தமான மன நிலை காணப்படும். உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

வீட்டை நவீனமாக்க முயல்வீர்கள். ஆனால் போதிய பணம் கையில் இருக்காது.எதிர்கால செலவுகளுக்காக பணத்தை பாதுகாக்க வேண்டிய அவசியம் காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு சற்று கவலையை அளிக்கும்.



# இராணுவ முகாமில் மின் தாக்கி இறந்த யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசினார்களாம்!

## இராணுவத்தினர் மூவர் கைது செய்யப்பட்டனர்

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசினர் என்று கூறப்படும் மூன்று இராணுவ வீரர்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கொம்பு வைத்தகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானை ஒன்று கடந்த மாதம் இறந்துள்ளது. இறந்த யானையை இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி குளத்திற்குள் வீசினர் எனவும், அதன் உடற்பாகங்கள் குளத்தில் காணப்படுகின்றன எனவும் பொதுமக்கள் தெரிவித்தமையையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளையடுத்து மூன்று இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.